# பெரியாழ்வார் அருளிச் செய்த
# பெரியாழ்வார் திருமொழி
# மூன்றாம் பத்து

## எட்டாம் திருமொழி - நல்லதோர் தாமரை
## தலைமகனுடன் சென்ற தலைமகளைக் குறித்து
## தாய் பலபடி வருந்திக் கூறும் பாசுரம்

** நல்லதோர் தாமரைப் பொய்கை * நாண்மலர் மேல் பனி சோர *
அல்லியும் தாதும் உதிர்ந்திட்டு * அழகழிந்தால் ஒத்ததாலோ **
இல்லம் வெறியோடிற்றாலோ * என் மகளை எங்கும் காணேன் *
மல்லரை அட்டவன் பின் போய் * மதுரைப் புறம் புக்காள் கொலோ? 1

ஒன்றும் அறிவொன்றில்லாத * உருவறைக் கோபாலர் தங்கள் *
கன்று கால்மாறுமா போலே * கன்னி இருந்தாளைக் கொண்டு **
நன்றுங்கிறி செய்து போனான் * நாராயணன் செய்த தீமை *
என்றும் எமர்கள் குடிக்கு * ஓர் ஏச்சுக்கொல் ஆயிடுங்கொலோ? 2

குமரி மணஞ்செய்து கொண்டு * கோலம் செய்து இல்லத்திருத்தி *
தமரும் பிறரும் அறியத் * தாமோதரற்கென்று சாற்றி **
அமரர் பதியுடைத் தேவி * அரசாணியை வழிபட்டு *
துமிலம் எழப் பறை கொட்டித் * தோரணம் நாட்டிடுங்கொலோ? 3

ஒரு மகள் தன்னை உடையேன் * உலகம் நிறைந்த புகழால் *
திருமகள் போல வளர்த்தேன் * செங்கண்மால் தான் கொண்டு போனான் **
பெருமகளாய்க் குடி வாழ்ந்து * பெரும் பிள்ளை பெற்ற அசோதை *
மருமகளைக் கண்டுகந்து * மணாட்டுப் புறம் செய்யுங்கொலோ? 4

தம் மாமன் நந்தகோபாலன் * தழீஇக் கொண்டு என் மகள் தன்னை *
செம்மாந்திரே என்று சொல்லிச் * செழுங்கயற்கண்ணும் செவ்வாயும் **
கொம்மை முலையும் இடையும் * கொழும் பணைத் தோள்களும் கண்டிட்டு *
இம்மகளைப் பெற்ற தாயர் * இனித் தரியார் என்னுங்கொலோ? 5

வேடர் மறக்குலம் போலே * வேண்டிற்றுச் செய்தென் மகளை *
கூடிய கூட்டமேயாகக் * கொண்டு குடி வாழுங்கொலோ? **
நாடும் நகரும் அறிய * நல்லதோர் கண்ணாலம் செய்து *
சாடிறப் பாய்ந்த பெருமான் * தக்கவா கைப்பற்றுங்கொலோ? 6

அண்டத்தமரர் பெருமான் * ஆழியான் இன்றென் மகளை *
பண்டப் பழிப்புக்கள் சொல்லிப் * பரிசற ஆண்டிடுங்கொலோ? **
கொண்டு குடி வாழ்க்கை வாழ்ந்து * கோவலப் பட்டம் கவித்து *
பண்டை மணாட்டிமார் முன்னே * பாதுகாவல் வைக்குங்கொலோ? 7

குடியில் பிறந்தவர் செய்யும் * குணம் ஒன்றும் செய்திலன் அந்தோ! *
நடை ஒன்றும் செய்திலன் நங்காய்! * நந்தகோபன் மகன் கண்ணன் **
இடை இருபாலும் வணங்க * இளைத்திளைத்து என் மகள் ஏங்கி *
கடை கயிறே பற்றி வாங்கிக் * கை தழும்பு ஏறிடுங்கொலோ? 8

வெண்ணிறத் தோய் தயிர் தன்னை * வெள்வரைப்பின் முன் எழுந்து *
கண்ணுறங்காதே இருந்து * கடையவும் தான் வல்லள் கொலோ? **
ஒண்ணிறத் தாமரைச் செங்கண் * உலகளந்தான் என் மகளை *
பண்ணறையாப் பணி கொண்டு * பரிசற ஆண்டிடுங்கொலோ? 9

** மாயவன் பின் வழி சென்று * வழியிடை மாற்றங்கள் கேட்டு *
ஆயர்கள் சேரியிலும் புக்கு * அங்குத்தை மாற்றமும் எல்லாம் **
தாயவள் சொல்லிய சொல்லைத் * தண்புதுவைப் பட்டன் சொன்ன *
தூய தமிழ்ப் பத்தும் வல்லார் * தூமணிவண்ணனுக்கு ஆளரே 10

**பெரியாழ்வார் திருவடிகளே சரணம்**

---